03.06.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரொகையாபீ | | |
| த/பெ | அப்துல்ஜபார் | | |
| கிராமம் | திருக்கோவிலூர் | தொழில் | |
| தாலுக்கா | திருக்கோவிலூர் | வயது | 54/2024 |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** _வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன அப்துல்ஜபார் எனது கணவர். அ.சா.1 சம்சுதீன் என் கணவரின் அண்ணன். சாட்சிகள் 2 முதல் 5 வரை உள்ளவர்களை எனக்கு தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். எடப்பாளையம் என் கணவருக்கு சொந்த ஊர். அங்கு எங்களுக்கு கழனி உள்ளது. அந்த கழனியில் ஒரு வீடு கட்டி அந்த வீட்டில் பகலில் இருந்து விவசாயம் பார்த்து விட்டு இரவில் என் கணவர் என் வீட்டிற்கு வந்து விடுவார். 27.06.2018 அன்று காலையில் எப்போதும் போல 9 மணிக்கு என் கணவர் கழனிக்கு சென்றார். மதியம் 2 1/2 மணிக்கு அவருக்கு போன் போட்டேன். ஆனால் போன் போகவில்லை. அதன் பிறகு என் கொழுந்தனார் நபிபாஷா (அ.சா. 2) என்பவருக்கு போன் போட்டு என் கணவருக்கு போன் போகவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பிரியாணி வாங்கி கொடுத்துவிட்டு வந்தேன் அண்ணி, அதை சாப்பிட்டு விட்டு அவர் திருவெண்ணெய்நல்லூர் செல்ல வேண்டும் என்று சொன்னதாக சொன்னார். அதனால் நான் விட்டுவிட்டேன். அதன் பிறகு மாலை சுமார் 6, 6.10 மணியளவில் நான் என் கணவருக்கு போன் போட்டு பார்த்துவிட்டு போகாததால் நபிபாஷாவிற்கு போன்போட்டு திரும்பவும் போய் பார் என்று சொன்னேன். பார்த்துவிட்டு

அவர் எனக்கு என் கணவர் பலத்த வெட்டுகாயத்துடன் இரத்த வெள்ளத்தில் வீட்டின் நடுவில் கட்டிலுக்கு அருகில் குப்புற இறந்து கிடக்கிறார் என்றும், அவரை யாரோ கொலை செய்து போட்டுள்ளார்கள் என்றும் போன் மூலம் தகவல் தெரிவித்தார். நாங்கள் அனைவரும் ஓடி வந்து பார்த்தோம்.. எனது மூத்தார் அ.சா.1 சம்சுதினுக்கும் தகவல் சொல்லி அவர் வந்து பார்த்தார். நாங்கள் போய் பார்த்தபோது என் கணவருக்கு தலை, கழுத்து, காது அருகில் கை ஆகிய இடங்களில் பலத்த வெட்டு காயங்களுடன் கிடந்தார். அதன் பிறகு இது சம்மந்தமாக என் மூத்தார் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எது நடந்தாலும் என் கணவர் என்னிடம் வந்து இரவு அனைத்து விசயங்களையும் சொல்வார். முதலூர் கண்ணதாசனுக்கும், 1ம் எதிரி மோகன், 2ம் எதிரி ரவி ஆகியோருக்கு இடையில் ஏற்கனவே நடந்த தகராறு மற்றும் முன்விரோதம் பற்றி என்னிடம் சொன்னார். இதுகுறித்து ஒரு நாள் மோகன் மற்றும் ரவி மற்றும் அவரை சார்ந்தவர்கள் கழனியில் உள்ள வீட்டிற்கு சென்று என் கணவரிடம் நடந்த சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்டுவிட்டு பிறகு என் கணவரை மிரட்டி விட்டு சென்றதாக என்னிடம் கூறினார் (மேற்படி சாட்சி தனது கணவர் கூறியதாக சொல்லியுள்ள சங்கதிகள் 161 குவிமுச வாக்குமூலத்தில் சொல்லாத சங்கதிகள் என்று எதிரிகள் தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் பதிவு செய்யப்பட்டது) அதன் பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக திருவெண்ணெய்நல்லூர் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் தெரிந்ததை சொன்னேன்.

2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

<u>5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலையத்தார் என்னை நான் அங்கு வந்தபோதே விசாரித்தார்கள். நான் அப்போது என் கணவர் என்னிடம் எதிரிகள் மன்னிப்பு கேட்டதாக கூறிய சங்கதிகளை காவல் துறையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. அதன் பிறகு அன்றே மீண்டும் ஞாபகம் வந்து சொன்னேன். எனக்கு படிக்க தெரியாது. காவல்துறையினர் அவர்கள் எழுதியதை என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2 வது முறை எனக்கு ஞாபகம் வந்து சொன்னதை காவல் துறையினர் எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சென்று

கணவரின் பிரேதத்தை பார்த்தபோது என்னுடன் யார் யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை காவல் துறையினர் வீட்டிற்கு 2,3 முறை வந்து விசாரித்தார்கள். பிரேத விசாரணை மேற்கொண்டபோது நான் அங்கு இருந்தேன். அதில் சாட்சி யார் யார் போட்டார்கள் என்றால் போட்டார்கள் எனக்கு ஞாபகம் இல்லை. அதில் என்ன எழுதி இருந்தது என்று படித்து காண்பித்தார்கள். ஆனால் ஞாபகமில்லை. நான் எனது காவல்துறை வாக்குமூலத்தில் என் கணவரை யாரோ இப்படி செய்து விட்டார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எனக்கு யாரோ சொல்லி கொடுத்ததற்கு இணங்க எதிரிகளை குறித்து தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்த நபர் என் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1,3,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதால் முடிக்கப்பட்டது.